1973 ஆகஸ்ட் 11]

திரு. கோவை செழியன்: தமிழ்நாட்டில் அமைக்கப்படுகிற ப்ளாஸ்டிக் தொழிற்சாலை, பாலிதின் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் கட்டடங்கள் அமைக்கப்பட்டதற்குப் பின்னுல்தான் முழு உரிமை (licences) பெறுகிருர்கள். இந்த பாலித்தின் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய க்ரான்யுல்ஸ் ஒரு வாரத்திற்குப் போதுமானதாக இல்லை. அதை அதிகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: க்ரான்யுல்ஸ் உற்பத்தி செய்வது வட மாநிலங்களில்தான். அடிக்கடி இப்படி ஒரு இடர்ப்பாடு ஏற்பட்டு வருவதை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, since this question covers plastic industries, may I know from the Hon. Minister for Industries whether financial assistance is given to small cottage industries which use plastic wires, sheets, etc., for making chairs and other articles, as these industries are rapidly replacing village industries?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனுல் சிறு தொழில் நிர்வாகத்தில் இப்படிப்பட்ட மனுக்கள் வந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா: இப்போதிருக்கிற ப்ளாஸ்டிக் 70 சென்டிகிரேட் உஷ்ணத்தைத்தான் தாங்குகிறது. 250 டிகிரி வரை தாங்கக்கூடிய டப்ளான் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்களுக்கு ப்ளாஸ்டிக் தொழிலுக்கான லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் இல்லை. தூத்துக்குடியில் இப்படிப்பட்ட தொழிற்சாலை ஒன்று புதியதாகத் துவங்கப்பட்டிருக்கிறது என்பது ஞாபகம்.

Caustic Soda Plant

* 87 Q—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Caustic Soda Factory in the State in (i) Private and (ii) Public Sector; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ): பொதுத் துறையில் காஸ்டிக் சோடாத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

தனியார் துறைத் தொழில் அதிபர்கள் ஐவர் காஸ்டிக் சோடா தொழிற் சாலை நிறுவ இசைவுக் கடிதங்கள் தரக் கோரி மத்திய அரசுக்கு மனுச் செய் துள்ளார்கள். அவர்களில் ஒருவருக்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the Hon. Minister is always saying that it is always good to encourage joint sector. Have they thought about the joint sector for this industry also?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நம்மிடத்தில் ஒருவருக்கு இசைவுக் கடிதம்—லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஜாயின்ட் செக்டாரில் துவங்கலாம் என்று சொல்கிறார்கள். அது பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப் : இந்தமாதிரி காஸ்டிக் சோடாத் தொழிற்சாலை ஒன்று ராணிப்பேட்டையில் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுப் போட்டிருக்கி றார்களா? போட்டிருந்தால் அதற்கு இன்னமும் லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கப்படவில்லை என்பதை மாநில அரசு அறியுமா? உடனடியாக அந்தப் பகுதி தொழிலதிபர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி முன்வந்தால் நாம் சிபார்சு செய்யலாம்.

திரு. ஏ. க. துரைசாமி : காஸ்டிக் சோடாப் பற்றாக்குறை காரணமாக இன்றைக்கு ஐந்து மடங்கு, பத்து மடங்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, அரசாங்கமே சொந்தமாக காஸ்டிக் சோடா தயாரிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் இங்கே செய்ய அனுமதி கிடைத்திருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழகத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இசைவு கொடுப்பதற்கே பல சிரமங்கள், காலதாமதமாகிறது. ஆகவே சென்டிரல்-ஸ்டேட் இணைந்த செக்ரடேரியட் மாநிலத்தில் ஏற்படுத்த

வேண்டுமென்று மத்திய அமைச்சர் கூறியிருக்கிறாரே, அதைப்பற்றி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

New buildings for Munsiff Court at Tiruttani

* 88 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to house the District Munsiff's Court, Tiruttani in new buildings ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) திருத்தணி மாவட்ட முன்சிப் நீதிமன்றமும், திருத்தணி சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் தற்போது தனியார் கட்டிடமொன்றில் உள்ளன. இந்த நீதிமன்றங்களை அரசுக் கட்டிடமொன்றில் அமைக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் எண்ணம் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி செயற்குறிப்பைப் பணிந்தனுப்பி யுள்ளார். இச் செயற்குறிப்பை அரசு பரிசிலனை செய்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி எந்த எந்த இடங்களில் முன்சிப் கோர்ட்டுகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அரசாங்கம் சொந்தக் கட்டிடம் கட்ட ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க அலுவலகங்கள் நிறைய வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒரேயடியாக சொந்தக் கட்டிடங்களுக்குக் கொண்டுவர முடியாது.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணியில் முன்சிப் கோர்ட் கட்டிடம் கட்டும்போதே நீதிபதிகளுக்கும் க்வார்டர்ஸ் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் உள்ள நீதிபதிகளுக்கு வீடு கட்டுகிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அங்கு நிறைவேற்றப்படாமல் இருந்தால் நிறைவேற்றப்படும்.